# காமராசர், மூப்பனார் பிரதமர் ஆவதைத் தி.மு.க. தடுத்ததா?

**நேற்றைய தொடர்ச்சி**

ஐக்கிய முன்னணியின் நிலைக்குழுவின் அவசரக் கூட்டம் 18.4.1997 அன்று டெல்லியில் அதன் கட்சி அலுவலகத்தில் கூடியது. "ஐக்கிய முன்னணிக்கு புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அந்தத் தலைவரை காங்கிரஸ் கட்சி ஆதரிக்கும்!" என்று காங்கிரஸ் கட்சியின் தலைவர் சீதாராம் கேசரி அவர்கள் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியிருந்த கடிதத்தின் நகலை ஐக்கிய முன்னணியின் நிலைக்குழு விற்கும் காங்கிரஸ் கட்சி அனுப்பி வைத்திருந்தது. அந்தக் கடிதம் குறித்து ஐக்கிய முன்னணியின் நிலைக் குழு விவாதித்தது. "காங்கிரஸ் கட்சி தருகிற ஆதரவு மீது ஐக்கிய முன்னணி தலைவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுமேயானால், புதிய அரசு அமைப்பதற்கு தான் குறுக்கே தடையாக இருக்க மாட்டேன்!" என்று பிரதமர் தேவகவுடா அந்தக் கூட்டத்தில் கூறினார்.

புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாகத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் பல கட்டங்களில் நடைபெற்றன. பல மாநில முதல் அமைச்சர்களும், கட்சிகளின் தலைவர்களும், என்னைத் தனித்தனியாகச் சந்தித்து அவரவர்களின் கருத்துகளைத் தெரிவித்தனர். வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த ஐ.கே.குஜ்ரால், நிதியமைச்சர் ப.சிதம்பரம், த.மா.கா. தலைவர் ஜி.கே.மூப்பனார், மத்திய அமைச்சர் அருணாசலம், பீகார் முதல்வராக இருந்த லல்லு பிரசாத் யாதவ், சந்திரபாபு நாயுடு ஆகியோர் என்னைச் சந்தித்து விவாதித்தனர்.

இறுதியாக ஐக்கிய முன்னணியின் வழிகாட்டுக் குழுக் கூட்டம் 19.4.97 அன்று இரவு 7.30 மணியளவில் கூடியது. அதில் ஐக்கிய முன்னணி யின் புதிய தலைவராக ஐ.கே.குஜ்ரால் பொதுக் கருத்தின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தகவலை காங்கிரஸ் கட்சியின் தலைவர் சீதாராம் கேசரிக்கு ஐக்கிய முன்னணியின் அமைப்பாளர் சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

20.4.1997 அன்று காலையில் டெல்லியிலுள்ள ஆந்திர பவனில் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் கூடி, முறைப்படி குஜ்ரால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் நானும், ஏனைய ஐக்கிய முன்னணித் தலைவர்களும் குடியரசுத் தலைவரைச் சந்தித்து விவரங்களை விளக்கினோம். சந்திரபாபு நாயுடு காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரியைச் சந்தித்துப் பேசினார். ஐக்கிய முன்னணியின் புதிய அரசின் செயல்பாடுகள் பற்றி உறுதிசெய்ய பத்துப் பேர் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு அமைப்பதென்று அப்போது தீர்மானிக் கப்பட்டது. பிரதமர் குஜ்ரால் தலைமையிலான இந்தக் குழுவில் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த ஐந்து பேரும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஐந்து பேரும் இடம் பெறுவதென்று முடிவு செய்யப்பட்டது.

ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐ.கே.குஜ்ரால் குடியரசுத் தலைவர் சர்மா அவர்களை 20-ஆம் தேதி இரவு குடியரசுத் தலைவர் மாளிகையில் சந்தித்து உரையாடினார். அப்போது அவரை பிரதமராக நியமித்ததற்கான கடிதத்தை குடியரசுத் தலைவர் அளித்ததாகவும், 22- ஆம் தேதியன்று மக்களவையிலே பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்ட தாகவும் குஜ்ரால் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். ஐக்கிய முன்னணியின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குஜ்ரால், டெல்லி தமிழ் நாடு இல்லத்திற்கு வருகை தந்து, என்னைச் சந்தித்து பொன்னாடை போர்த்தி நன்றி தெரிவித்துக் கொண்டார். நானும் அவருக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்துக் கூறினேன்.

இதற்கிடையில் "மத்தியில் ஐக்கிய முன்னணி அரசில் பங்கேற்க மாட்டோம், வெளியிலிருந்து ஆதரவு தருவோம்!" என்று த.மா.கா. சார்பில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. அதைப்பற்றி செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது, ""எதிர்பாராதது - வருந்தத்தக்கது - மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய முன்னணியின் வழிகாட்டுக் குழுக்கூ ட்டத்திலேயே மூப்பனாரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. தொடர்ந்து கேட்டுக் கொள்ளப்படும். நாட்டின் நன்மைக்காக அவர்கள் எடுத்துள்ள முடிவை திரும்பப் பெறுமாறு வேண்டுகிறேன்" என்று கூறினேன்.

21.4.1997 அன்று காலையில் ஐக்கிய முன்னணி அரசின் புதிய பிரதமராக ஐ.கே.குஜ்ரால் அவர்கள் பதவியேற்றார். அவருடன் முரசொலி மாறன் உள்ளிட்ட 33 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர். குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பதவியேற்பு விழாவில் நானும் கலந்து கொண்டுவிட்டு சென்னை திரும்பினேன்.

ஆனால் அதற்குள் "மூப்பனாரை பிரதமராக்க இடதுசாரிகள் ஒப்புக்கொள்ள வில்லை!" என்ற ஒரு கருத்தும், தி.மு.க. மீது குறை கூறி மற்றொரு கருத்தும் தமிழகத்தில் பரவலாக ஒரு சில ஏடுகளில் வெளிவந்திருந்தது. விமான நிலையத்தி லேயே செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து இந்தப் பிரச்சினை குறித்தே முதல் கேள்வியைக் கேட்டார்கள்.



க. திருநாவுக்கரசு

அதற்கு நான், "பிரச்சினைகளை உருவாக்கியதும், உருவாக்கிக் கொண்டிருப்பதும் சில பத்திரிகைகள்தான். நான் எல்லா பத்திரிகைகளையும் சொல்லவில்லை. ஏடுகளில் வெளிவந்துள்ள செய்திகள் எல்லாம் வதந்திகள்தான். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தங்களுடைய ஆதரவை மூப்பனாருக்குத் தரவில்லை. வேறு ஒரு வேட்பாளருக்குத் தந்தார்கள். அப்படி ஆதரவு கொடுக்கும் போது அவர்களுடைய நிலையைச் சொன்னார்களே தவிர, தனிப்பட்ட முறையில் தமிழ்மாநிலக் காங்கிரசைப் பற்றியோ, மூப்பனாரைப் பற்றியோ எதுவும் சொல்லவில்லை. அப்படியிருந்தும் சில பத்திரிகைகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய நேர்மையைச் சந்தேகிப்பதைப் போல செய்தியை வெளியிட்டார்கள். அதுபற்றி ஜோதிபாசு அவர்களும், நானும், சந்திரபாபு நாயுடு அவர்களும் வழிகாட்டும் கூட்டத்திலும் சொல்லியிருக்கிறோம்.

"நேற்றைய தினம் இரவு 11 மணியிலிருந்து சுமார் 12 மணி வரையில் நானும், ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவும், முரசொலி மாறனும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தோழர் சீத்தாராம் எச்சூரி அவர்களும் மூப்பனாரை அவர் தங்கியிருக்கும் இடத்தில் சந்தித்து, பத்திரிகைகளில் தவறாக வந்த செய்திகளைப் பொருட்படுத்த வேண்டாமென்று எடுத்துக்கூறி மத்திய அமைச்சரவையிலே தமிழ் மாநிலக் காங்கிரசார் பங்கு கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இன்று காலையில் 8.30 மணி அளவில் மூப்பனார் அவர்கள் என்னுடன் தொலைபேசியில் பேசுவதாகச் சொன்னார். அதன்படி இன்று காலையில் தொலைபேசியில் பேசினார். அவருடைய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களையும், மற்றும் அவருடைய கட்சியையும் கலந்து கொண்டு சொல்வதாக என்னிடம் குறிப்பிட்டி ருக்கிறார். அவர்கள் "மத்திய அரசில் பங்கு கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. **நான் சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்ற போதே, நாங்கள் மூப்பனாரை ஆதரிப்பதாகக் கூறி விட்டுத்தான் டெல்லி சென்றேன். அதன்படி முயற்சி எடுத்துக் கொண்டு டெல்லியிலே மார்க்சிஸ்ட் கட்சியைச் சந்தித்தேன் . ஜனதா தளத்தைச் சந்தித்தேன். எல்லாக் கட்சிகளையுமே சந்தித்தேன். அங்கேயுள்ள சூழ்நிலைக்கேற்ப பல வேட்பாளர்கள் போட்டியிட்டதில், இறுதியாக ஒருமித்த கருத்து குஜ்ராலுக்கு என்று முடிவான போது அந்தக் கருத்தை வழிகாட்டும் கூட்டத்தில் எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டோம்'** என்று விரிவாகப் பதில் சொன்னேன்.

தொடர்ந்து செய்தியாளர் ஒருவர், "த.மா.கா.வைச் சேர்ந்த சித்தன் போன்றவர்கள், நீங்களும் சந்திரபாபு நாயுடுவும் முடிவு பண்ணியிருந்தால், மூப்பனாரைத் தேர்ந்தெடுத்திருக்கலாம் என்று கடுமையாகப் பேசுகிறார்களே?" என்று கேள்வி கேட்டதற்கு -

**"ஐக்கிய முன்னணியில் 13 கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. மூப்பனாருக்காக மற்ற கட்சிகளோடு பேசத்தான் நான் 17-ஆம் தேதி டெல்லிக்கு வந்தேன். அன்று பிஜூ பட்நாயக் காலமானதால் "எந்தத் தலைவர்களையும் சந்திக்க இயலவில்லை. எனினும் இரவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் சுர்ஜித் போன்றவர்களை அவர்களது இல்லத்துக்கே சென்று சந்தித்தேன். லல்லு பிரசாத் யாதவ், சரத் யாதவ் ஆகியோரை மறுநாள் சந்தித்து, மூப்பனாருக்காக ஆதரவு கேட்டேன். ஜனதா கட்சியைச் சேர்ந்த பிரதமர் தேவகவுடா பதவி விலகுவதால், அவருக்குப் பதிலாக ஜனதாதளத்தைச் சேர்ந்தவர்தான் பிரதமராக வர வேண்டுமென்று அவர்கள் உறுதியாக இருந்தனர். பெரிய அணியாக இருந்த இடதுசாரி அணியும், ஜனதாதள அணியும் வேறு கருத்து கொண்டிருக்கும் போது நான் என்ன செய்ய இயலும்? இதற்கிடையே அஸ்ஸாம் மாநில முதல்வர் மகந்தாவும் என் கருத்துக்கு இணங்கவில்லை. முலாயம் சிங் யாதவ் தனக்கே ஆதரவு தரவேண்டுமென தமிழ்நாடு இல்லத்துக்கு வந்து என்னிடம் கேட்டுக்கொண்டார்.**

**நான் மூப்பனாருக்கு ஆதரவு திரட்டுவதற்காகத்தான் கடந்த ஆண்டைப்போல தமிழ்நாடு மாளிகையில் அனைவரையும் சந்தித்து முடிவெடுக்கிற நிலையைத் தவிர்த்தேன். அதாவது நானே ஒரு வேட்பாளரை மூப்பனாரை ஆதரித்து ஆதரவு கேட்கும் போது மற்ற கட்சித் தலைவர்களை தமிழ்நாடு இல்லத்துக்கு அழைத்துப் பேசுவது முறையல்ல என்பதால் நானே அவர்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று ஆதரவு கோரினேன்" என்று விளக்கமாகப் பதில் கூறினேன்.**

தொடர்ந்து செய்தியாளர், "முடிவாக குஜ்ரால் பெயர் எப்படி வந்தது?" என்று கேட்டதற்கு, "அந்தப் போட்டியிலே இறுதியாக ஒரு நடுநிலையான வேட்பாளர் என்ற வகையில் அவருடைய பெயர் சொல்லப்பட்டது. ஒவ்வொரு கட்சியாக அழைத்து ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு பேசியதில் குஜ்ராலின் பெயர் ஒருமித்த கருத்தாக உருவானது. வழிகாட்டும் கூட்டத்தில் அவரது பெயரை சந்திரபாபு நாயுடு அறிவித்தார். அது ஏற்கப்பட்டது" என்று சொன்னேன்.

22.4.1997 அன்று நாடாளுமன்ற மக்களவை கூடியபோது, பிரதமர் குஜ்ரால் அவர்கள் நம்பிக்கை கோரும் தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார். அந்தத் தீர்மானத்தின் மீது 8மணி நேரம் விவாதம் நடைபெற்றது. விவாதத்திற்கு குஜ்ரால் பதில் கூறினார். நம்பிக்கை கோரும் தீர்மானத்தை மக்களவைத் தலைவர் பி.ஏ.சங்மா குரல் வாக்கெடுப்புக்கு விட்டார். பா.ஜ.க. மட்டும் தீர்மானத்தை எதிர்த்தது. எனினும் அந்தக் கட்சியும் டிவிஷன் வாக்கெடுப்பு கோரவில்லை. நம்பிக்கை கோரும் தீர்மானம் நிறைவேறியதாக மக்களவைத் தலைவர் அறிவித்து, அவையை ஏப்ரல் 30ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

மூப்பனாருக்குக் கிடைக்க விருந்த வாய்ப்பினை நான் ஏதோ கெடுத்து விட்டதாக எதிர்க்கட்சியினர் உறுதியாகப் பிரச்சாரம் செய்து, அதனைக் கேட்டு த.மா.கா.விலே உள்ள ஒரு சிலர் அதில் உண்மையிருக்குமோ என்ற வகையில் நினைத்தபோது, தொடர்ந்து நான் அதுகுறித்து செய்தியாளர்களிடம் விளக்கம் அளித்து வந்தேன். நான் டெல்லியிலிருந்து திரும்பிய பின் அதற்கு அடுத்த நாளே, 'குமுதம்' வார இதழுக்காக அதன் பொறுப்பாசிரியராக அப்போதிருந்த மாலன் என்னை ஒரு பேட்டி கண்டார். அந்தப் பேட்டி முழுவதுமே மூப்பனார் பிரச்சினை குறித்தே அமைந்தது என்பதால் அந்தப் பேட்டியின் சாராம்சத்தை இதிலே இணைப்பது நன்மை பயக்குமென்று எண்ணுகிறேன்."

கலைஞர் மூப்பனார் பிரதமர் ஆவதற்காகப் பெரும் சிரத்தையோடு பணியாற்றி இருக்கிறார் என்பதை மேலே நாம் எடுத்துக்காட்டிய பதிவுகள் எடுத்துச் சொல்கின்றன. அது மட்டுமல்லாமல் குமுதம் வெளியிட்ட மாலனின் சிறப்புப் பேட்டியையும் அவர் எடுத்துக்காட்டியிருக்கிறார். மூப்பனார் பிரதமர் ஆவது தி.மு.க.வின் தலைவர் கலைஞரின் தனித்த முடிவாக இருக்க முடியாது. தி.மு.க. ஐக்கிய முன்னணியில் அங்கம் வகித்த மூப்பனாரின் த.மா.கா.வைப் போன்ற ஒரு கட்சி - அந்த அணியில் 13 கட்சிகள் இருக்கின்றன. அவற்றில் இடதுசாரிகளும் ஜனதாதள கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் எண்ணிக்கையில் அதிகம் இருந்தனர். 17 உறுப்பினர்களைக் கொண்ட தி.மு.க. கூட்டு முடிவின் படித்தான் செயல்பட முடியும். எனவே மூப்பனார் பிரதமர் ஆவதை தி.மு.க.வின் தலைவர் தடுத்ததற்கான எந்தச் செய்தியும் நிகழவில்லை என்பதே உண்மை.

காமராசரும், மூப்பனாரும் பிரதமர் ஆவதற்குரிய சந்தர்ப்பங்கள் வாய்த்தன. அது நிறைவேறவில்லை. அதற்குக் காரணம் தி.மு.க. அல்ல. அந்தத் தமிழர்கள் பிரதமர் ஆவதைத் தடுத்தது தி.மு.க. என்று அமித்ஷா சொல்வது இமாலயப் பொய் என்று கூறுவதை விட 'ஆகாசப் புளுகு' என்றுதான் கூற வேண்டும்.

காமராசர் அவரே சந்தர்ப்பத்தை நிராகரித்துவிட்டார். மூப்பனாருக்கோ அணியில் இருந்த மற்ற கட்சிகளின் ஆதரவு இல்லை. இதனை தேவகௌடாவும் ஒரு பேட்டியில் கூறி இருக்கிறார். இந்தச் சந்தர்ப்பம் கலைஞருக்கும் கிடைத்தது. 'என் உயரம் எனக்குத் தெரியும்' என்று அவர் மறுத்துவிட்டதை எல்லோரும் அறிவர். தேவகௌடாவும் இதனைக் கூறுகிறார். இப்படி எல்லாம் பிரச்சினைகள் இருந்தன. இதற்கு தி.மு.க. என்ன செய்ய முடியும்? இதனைப் பிரதமர் ஆவதை தி.மு.க. தடுத்ததாகக் கொள்ள முடியுமா?

இதைக் கழக இளைஞர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த நீண்ட கட்டுரையை வெளியிட்டு இருக்கின்றோம். ●

அரசு கலைக்கல்லூரிகளில்

## 20 சதவிகிதம் வரை மாணவர் சேர்க்கையை அதிகரித்துக் கொள்ள அனுமதி!

### உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அறிவிப்பு!

சென்னை, ஜூன் 24 - அரசு கலைக்கல்லூரிகளில் 20 சதவீதம் வரை மாணவர் சேர்க்கையை அதிகரித்துக் கொள்ளலாம் என உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் அமைச்சர் க.பொன்முடி நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது பேசிய அவர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்வதற்காக நடத்தப்பட்ட கலந்தாய்வுகளில் இது வரை 77 ஆயிரத்து 984 மாணவ, மாணவிகள் சேர்ந்துள்ளதாகத் தெரிவித்தார். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர வரும் 30ஆம் தேதி வரைவிண்ணப்பிக்கலாம் என்றும், இக்கல்லூரிகளில் 20% வரை மாணவர் சேர்க்கையை அதிகரித்துக் கொள்ளலாம் என்றும் கூறினார்.



அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 15% வரையும், சுயநிதிக் கல்லூரிகளில் 10% வரையும் மாணவர் சேர்க்கையை அதிகரித்துக் கொள்ளலாம் என்றும் அமைச்சர் க.பொன்முடி தெரிவித்தார்.

பெரம்பலூர் மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை சி. பாஸ்கர் தந்தை

## ந.சிதம்பரம் திருவுருவப்படம் : ஆ.இராசா.எம்.பி. திறந்து வைத்து அஞ்சலி!

### எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. - கழகத்தினர் பங்கேற்பு!

*பெரம்பலூர், ஜூன் 24 - பெரம்பலூர் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் தழுதாழை சி.பாஸ்கர் தந்தை ந.சிதம்பரம்(94) என்பவர் கடந்த 05.06.2023 அன்று உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார்.*

*மறைந்த ந.சிதம்பரம் அவர்களின் படத்திறப்பு விழா நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.*

*பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செல்லும் சாலையில் உள்ள சி.பாஸ்கர் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கழக துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., கலந்து கொண்டு உருவப்படத்தை திறந்து வைத்து மரியாதை செலுத்தினார்.*

*இதில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் பா.துரை சாமி, மாநில மருத்துவ அணி துணை செயலாளர் டாக்டர் செ.வல்லபன்,*

*மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா.ப.பரமே ஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் ந. கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், வீ.ஜெகதீசன், தி. மதியழகன், எஸ்.நல்லதம்பி, சோமு.மதியழகன், சி.ராஜேந்திரன் உள்ளிட்ட தி.மு.க.வினர் பலர் கலந்து கொண்டனர்.*

சனாதனப் போர்வைக்குள் சன்மார்க்க நெறியினைப் புகுத்தும் 'தர்ம ரட்சகராக' புதிய அவதாரம்!

## ஆளுநரின் கருத்துகள் முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டியவை!

### ட்விட்டர்' பதிவில் - நிதி, மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கடும் கண்டனம்!

சென்னை, ஜூன் 24 - நிதி மற்றும் மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நேற்று முன்தினம் விடுத்த 'ட்விட்டர்' பதிவொன்றில், "ஆளுநர் மாளிகையை சனாதனக் கூடாரமாக மாற்றும் ஆளுநரின் கருத்துகள் முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டியவை!" என்று கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது 'ட்விட்டர்' பதிவு வருமாறு:-

சமரச சுத்த சன்மார்க்க நெறிக்கும், சனாதன தர்மத்திற்குமான அடிப்படை வேற்றுமையைக் கூட அறிந்து கொள்ளாமல், வடலூர் வள்ளல் பெருமான் வழிகாட்டிய நெறிமுறைகளை முற்றிலும் சிதைத்து சனாதனப் போர்வைக்குள் சன்மார்க்க நெறியினைப் புகுத்தும் முயற்சியில், "தர்ம ரட்சகராகப்" புதிய அவதாரம் மேற்கொண்டிருக்கும் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்,



தமிழ்ப் பண்பாடும் - விழுமியங்களும் தனித்தியங்கும் தன் இயல்பினைக் கொண்டவை என்பதை பல்லாயிரமாண்டு தமிழ்ச் சமூக நாகரீகச் சுவடுகள் நமக்கு வெள்ளிடை மலையாக உணர்த்தி இருக்கின்றன.

ஒன்றிய அரசின் "தனிப் பெருங் கருணை" ஏதோ ஒரு விதத்தில் வாய்க்கப் பெற்று விட்டதாலேயே ஆளுநர் மாளிகையை சனாதனக் கூடாரமாக மாற்றும் ஆளுநரின் கருத்துகள் முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டியவை.

இவ்வாறு அப்பதிவில் அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டுள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி வட்டம், பூம்புகாரில் பூம்புகார் சுற்றுலா மையம் ரூ.23.06 கோடி மதிப்பீட்டில் உலக சுற்றுலாத்தரத்திற்கு இணையாக மறு சீரமைக்கும் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (22.06.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது சுற்றுலா இயக்குனர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குனர் சந்தீப் நந்தூரி, சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் திருமதி.உ.அர்ச்சனா அவர்கள், மாவட்ட சுற்றுலா அலுவலர் அரவிந்த் குமார் மற்றும் பலர் உடன் இருந்தனர்.